## இலங்கை முதலீட்டுச் சபை – 2016

-----------------------------------------------

இலங்கை முதலீட்டுச் சபையின் (“சபை”) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 49 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1978 இன் 4 ஆம் இலக்க கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை முதலீட்டுச் சபையின் (பீஓஐ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எல்கேஏஎஸ்/ எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எல்கேஏஎஸ் 01 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்:-** நியமத்திலுள்ள ஏற்பாட்டின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை விளங்கிக்கொள்வதற்கு பொருத்தமானதாக பயன்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய கணக்கீட்டுக் கொள்கைகளை சபை வெளிப்படுத்த வேண்டிய போதிலும் திரண்ட நிதியிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்ட பாரிய செயற்திட்டங்களிற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்காக ஏற்பட்ட செலவினத்துடன் தொடர்புபட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், தன்மை மற்றும் சந்தர்ப்பங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **எல்கேஏஎஸ் 10 – அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னரான நிகழ்வுகள்:-** நிதிக்கூற்றுக்களானது வழங்குவதற்காக அங்கீகரிக்கப்படும் பொழுது நிதிக்கூற்றுக்கள் அத்திகதிக்குப் பின்னரான நிகழ்வுகளை பிரதிபலிப்பதில்லை என்பதை பயன்படுத்துவோர் தெரிந்துகொள்வதற்கு இது முக்கியமானதாக காணப்படுவதால் நிதிக்கூற்றுக்கள் வழங்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்படும் பொழுது திகதி மற்றும் அந்த அங்கீகாரத்தை வழங்கியவர் யார் என சபையானது வெளிப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்கள் வழங்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட திகதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) **எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்:-** நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்து பாவனைக்காக கிடைக்கக்கூடியதாக உள்ள போதும் சொத்து அகற்றப்படும் திகதிக்கு முன்னர் இடைநிறுத்தப்படும் போதும் சொத்தின் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு முரணாக, சபையானது கொள்வனவு செய்யப்படும் ஆண்டில் நிலையான சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வை மேற்கொண்டிருக்காத அதேநேரம் அகற்றப்படும் ஆண்டில் முழுமையாக மேற்கொள்ளுகின்றது.

(ஈ) **எல்கேஏஎஸ் 19 – ஊழியர் நலன்கள்:-** சபையானது எதிர்கால ஓய்வூதிய நலன் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு தனித்திட்டச் சொத்தை ஸ்தாபித்திருக்காத போதிலும் நடைமுறைச் சொத்துக்களின் கீழுள்ள திறைசேரி உண்டியல்களிலுள்ள முதலீடுகள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் (ஆர்ஈபிஓஎஸ்) ஓய்வூதிய நலன் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக வர்த்தக நிலையத்தின் 25 ஆவது அடுக்குமாடியின் வாடகை வருமானமானது மீளாய்வாண்டின் போது ஏற்படுத்தப்பட்ட புதிய குத்தகை உடன்படிக்கையை கருத்திற்கொண்டு கணிப்பிடுவதற்குப் பதிலாக முன்னைய குத்தகை உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாடகை வருமானத்தை கணிப்பீடு செய்ததன் காரணமாக ரூபா 3,882,144 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வகைப்படுத்தல் தவறு காரணமாக 2016 நவம்பர் மாதத்திற்கான தொங்கல் கணக்கிலுள்ள வட்டி மற்றும் குத்தகையிலுள்ள வாகனக் கணக்கு மீதான வட்டி என்பவற்றிற்கிடையில் ரூபா 222,150 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டில் பெறவேண்டியவையாக காட்டப்பட்டிருக்காத 2015 நவம்பர் மற்றும் திசெம்பர் இற்காக பெறப்பட்ட ரூபா 6,811,737 தொகையான அலுவலக வாடகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான மிகை அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 209,600,000 பெறுமதியான காணி 2011 இன் 43 ஆம் இலக்க குறைச் செயலாற்றல் அல்லது குறைப்பயன்பாட்டுச் சொத்துக்களைக் கொண்ட தொழில்முயற்சிகளை மறுசீரமைக்கும் அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பட்டியலை அடிப்படையாகக்கொண்டு இன்னொரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றின் மீது பெறவேண்டிய ரூபா 423,360,000 தொகையான இழப்பீடு உரிய தரப்பினரிடமிருந்து உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளாமல் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. ஆகையால், ஏனைய பெறவேண்டிய கணக்கு மீதி ரூபா 423,360,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், காணிப் பெறுமதிக்கும் இழப்பீட்டிற்கும் இடையிலான ரூபா 213,760,000 வேறுபாடு சபையின் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, திரண்ட நிதி ரூபா 213,760,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட ஏழு கணக்கு விடயங்களிற்கும் கணக்காய்விற்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த தகவல்களை பயன்படுத்தி கணக்காய்வில் கணிப்பிடப்பட்ட தொகைக்கும் இடையே ரூபா 92,727,084 கூட்டுத்தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வேறுபாடுகளிற்கான காரணம் கணக்காய்விற்காக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பெறுமானத்தேய்வுக் கணிப்பீட்டு அட்டவணை மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றிற்கான குறிப்பு இல. 11 என்பவற்றின் பிரகாரம் கட்டமைப்புக்களிற்கான பெறுமானத்தேய்வுக்கிடையில் ரூபா 167,900 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

### 2.3.1 பீஓஐ அங்கீகரித்த தொழில்முயற்சிகளிடமிருந்து பெறவேண்டியவை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பீஓஐ அங்கீகரித்த தொழில்முயற்சிகளிடமிருந்து பெறவேண்டியவை ரூபா 564,553,943 தொகையானதுடன் அதில் ரூபா 261,744,375 தொகை அல்லது 46 சதவீதம் இரண்டு வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தன.

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வருடாந்தக் கட்டணம் ரூபா 231,271,138 தொகையானதுடன் அதில் ரூபா 142,569,265 அல்லது 62 சதவீதம் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன.

(iii) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு தொழில்முயற்சிகளிடமிருந்து மொத்தப் பெறவேண்டியவைகளில் 54 சதவீதத்தை நட்டக்கழிவிற்கான ஏற்பாடு பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(iv) ரூபா 304,664,041 மொத்த நட்டக்கழிவுக்கான ஏற்பாட்டில் ரூபா 256,934,105 தொகை அல்லது 84 சதவீதம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரத்துச்செய்யப்பட்ட, மூடப்பட்ட மற்றும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து பெறவேண்டியவையை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(v) மீளாய்வாண்டின் போது வருடாந்தக் கட்டணங்களிற்காக ரூபா 203,743,845 அல்லது 88 சதவீத நட்டக்கழிவுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் ரூபா 181,101,811 தொகை அல்லது 78 சதவீதமானது 438 இரத்துச்செய்யப்பட்ட செயற்திட்டங்கள், 180 மூடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் 83 செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்து பெறவேண்டியவையை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

### 2.3.2 ஏனைய பெறவேண்டியவைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வதுப்பிட்டிவள வீட்டுப் பிரிவுகளின் ஏலக் கணக்கு தொடர்பாக தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,604,200 தொகை ஆறு வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாதிருந்ததுடன் கம்பனிக்கும் சபைக்கும் இடையிலான உடன்படிக்கையின் உள்ளதன்மையை நிரூபிப்பதற்கு எந்தவொரு சான்றாதாரமும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 507,650 காசுக் குறைவு மற்றும் 2,090 இருப்புக் குறைவு என்பன பதின்மூன்று வருடங்களிற்கு மேலாக மாற்றமடையாதிருந்தன.

(iii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 490,544,093 தொகையான மொத்த ஏனைய பெறவேண்டியவைகளில் ரூபா 461,040,103 தொகை அல்லது 94 சதவீதம் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிடமிருந்து பெறவேண்டியவைகளை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. மேலும், அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 37,680,103 தொகை 4 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| **நிறுவனத்தின் பெயர்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| ஜனத தோட்ட அபிவிருத்திச் சபை | 37,412,573 |
| வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 141,950 |
| இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 125,580 |
| **மொத்தம்** | **37,680,103** |

(iv) மேலும், நான்கு வருடங்களிற்கு மேலாக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுவதற்கு 2016 திசெம்பர் 31 வரையிலும் தவறியிருந்ததால் இந்த மீதிகள் மீது நட்டக்கழிவிற்காக 100 சதவீத ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.3.3 அறவிடமுடியாத பதவியணியினர் கடன்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,671,860 மொத்த அறவிடமுடியாத கடன் மீதிகளில் ரூபா 1,403,748 தொகை அல்லது 25 சதவீதம் 4 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன.

(ii) ஏழு வேலை இடைநிறுத்தப்பட்ட ஊழியர்கள் மற்றும் எட்டு பதவி வறிதாக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து பெறவேண்டிய முறையே ரூபா 3,405,344 மற்றும் ரூபா 2,235,299 கூட்டுத்தொகையான அறவிடமுடியாத கடன் மீதிகள் நிலுவையாகவிருந்தன. மேலும், பெறவேண்டியவைகளை அறவிடாமல் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் ஒப்பந்தக் காலப்பகுதி முடிவடைந்தமை, ஊழியர்கள் பதவி விலகியமை மற்றும் வரிசை அமைச்சிற்கு ஊழியர்களை விடுவித்தமை காரணமாக மீதிகள் அறவிடப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.3.4 செலுத்த வேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 8,392,906 கூட்டுத்தொகையான சில்லறைக் கடன்கொடுத்தோர் 3 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 19,809,741 கூட்டுமொத்தமான நிறுத்திவைத்தல் பணத்தில் 16 ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட ரூபா 5,446,915 தொகை அல்லது 27 சதவீதம் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாதிருந்தன.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 10(5) ஆம் பிரிவு | ஒதுக்கீட்டின் பின்னர் மீளாய்வாண்டின் தேறிய மிகை திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் ஒத்துழைப்புடன் தொடர்புபட்ட உரிய அமைச்சரின் அங்கீகாரமின்றி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,741,059,094 தொகையை சபை முதலிட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 113(3) | பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 23,442,740 தொகையான பீஓஐ தொழில் முயற்சிகளிடமிருந்து பெறவேண்டியவைகளை விட்டுவிடுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. |
| (இ) 2010 திசெம்பர் 14 இன் பிஈடி 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் அவதானிப்பாளரொருவராக பொதுத் திறைசேரியிலிருந்து பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 யூன் 14 இன் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் அதன் ஊழியர்களுக்கு அமைச்சரவை, பொது நிர்வாகம் அல்லது பொதுத் திறைசேரி என்பவற்றின் ஆட்சி சபைகளின் அங்கீகாரத்துடன் அவற்றால் விசேடமாக அங்கீகரிக்கப்பட்ட அந் நலன்களை மாத்திரம் கொடுப்பனவு செய்ய முடியும். எனினும், சபையானது அத்தகைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது அதன் ஊழியர்களிற்கு ரூபா 11,627,707 கூட்டுத்தொகையான தொழில்சார், இடர் மற்றும் விசேட படிகளை செலுத்தியிருந்தது. மேலும், 1990 திசெம்பர் 13 இல் பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் மூலம் சபையானது மீளாய்வாண்டிற்கான போக்குவரத்து சலுகையாக ரூபா 26,168,541 தொகையை செலுத்தியிருந்தது.

அதேநேரம் மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் ஊழியர்கள் வருகை ஊக்குவிப்பு மற்றும் பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறையினை காசாக்குதல் இரண்டையும் அனுபவித்திருந்தனர். ஊழியர்களின் வருகையை அடிப்படையாகக்கொண்ட நடைமுறையிலுள்ள ஊக்குவிப்புத் திட்டத்திற்கு பதிலாக முறையான ஊக்குவிப்புத் திட்டத்தை தயாரிப்பதற்கு 2012 நவம்பர் 14 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் நெறிப்படுத்தல்களின் பிரகாரம் 2013 நவம்பர் 01 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் வருகை ஊக்குவிப்புத் திட்டமானது முக்கிய செயலாற்றல் கொடுப்பனவு (கேபிபி) திட்டத்தால் மீளமைக்கப்பட்டிருந்தது. சபையானது முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2016 ஆம் ஆண்டிற்கான முக்கிய செயலாற்றல் கொடுப்பனவுப் படியாக ரூபா 349,375,058 தொகையை செலுத்தியிருந்தது. மேலும், படிக் கணிப்பீட்டு முறை 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றியும் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரையின்றியும் திருத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 16 இன் பீஈடி 05/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், உரிய நிதியாண்டின் போது இலாபங்கள் உழைக்கப்பட்டிருக்கின்ற மற்றும் வருகை செயலாற்றல் அல்லது வேறு ஏதேனும் ஊக்குவிப்பு படிவத்தை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புக்கள் செலுத்தப்படுகின்ற அல்லது செலுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்க கூட்டுத்தாபனங்களிற்கான பிரேரிக்கப்பட்ட மிகையூதியம் ரூபா 13,500 ஆக உள்ளது. எவ்வாறாயினும் சபையானது மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக வருடாந்த மிகையூதியமாக நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலுள்ள ஊழியர்கள் ஒவ்வொருவரிற்கும் ரூபா 40,000 தொகையை செலுத்தியிருந்ததுடன் ரூபா 48,159,291 தொகையானது 2016 ஆம் ஆண்டிற்கான மிகையூதியமாக அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தப்படுகின்ற பதவியணியினர் கடன் திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

---------------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

-----------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 407,166,738 வரிக்கு முன்னரான தேறிய மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 768,128,696 ஆன வரிக்கு முன்னரான தேறிய மிகையில் விளைந்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 360,961,958 ஆன முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 135,699,114 ஆல் மொத்தச் செலவினம் அதிகரித்தமைக்கு எதிராக வருமானம் மற்றும் நிதி வருமானம் என்பன முறையே ரூபா 391,587,620 மற்றும் ரூபா 103,637,217 ஆல் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்குப் பிரதான காரணங்களாகப் பங்களித்திருந்தன.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

**செலவினத்தின் வழமைக்கு மாறான அதிகரிப்பு**

மீளாய்வாண்டிற்கான சட்ட மற்றும் தொழில்சார் கட்டணங்கள் ரூபா 40,995,850 தொகையாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சட்ட வழக்குகள் மற்றும் சர்வதேச பிணக்குத் தீர்த்தல்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையால் முன்னைய ஆண்டின் ரூபா 20,484,797 உடன் ஒப்பிடுகையில் இது 100 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணைந்து சபையானது மீளாய்வாண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கையை தயாரித்திருக்கவில்லை. ஆகையால், சபையின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான ஆக்கபூர்வமான கருவியொன்றாக செயல்நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் பிரதான நோக்கங்களை அடைதலின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு உள்ளன.

(i) இலங்கை முதலீட்டுச் சபை செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம்

இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஐந்து ஆண்டுகளிற்கான செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றங்கள் கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **உடன்படிக்கைகள் கைசாத்திட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை** | **ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை** | **இரத்துச்செய்யப்பட்ட, மூடப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 2016 | 182 | 52 | 133 |
| 2015 | 156 | 96 | 111 |
| 2014 | 155 | 100 | 125 |
| 2013 | 146 | 108 | 165 |
| 2012 | 164 | 105 | 114 |
| 2011 | 165 | 103 | 58 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- முன்னைய 04 ஆண்டுகளின் போது செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவு குறைவு அவதானிக்கப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது தொடர்பில் 46 சதவீத குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

- 2012–2016 காலப்பகுதியின் போது ஒவ்வொரு ஆண்டிலும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கையை விட இரத்துச் செய்யப்பட்ட, மூடப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தன.

**(ii) கவரப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள்**

2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது கவரப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐ) கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **கூட்டிணைந்த திட்டத்தின் (2014–2016) பிரகாரம் வருடாந்த இலக்கு** | **உள்ளபடியான அடைதல்** | **வருடாந்த இலக்குகளின் சதவீதமாக உள்ளபடியான அடைதல்கள்** |
|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | |
| 2016 | 5,000 | 801.00 | 16 |
| 2015 | 3,500 | 969.66 | 28 |
| 2014 | 2,500 | 1,616.26 | 65 |
| 2013 | 1,391 | 1,391.40 | 100 |
| 2012 | 1,338 | 1,338.16 | 100 |

சபையின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்கான இலக்கிடப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 5,000 மில்லியனாகவிருந்தது. எவ்வாறாயினும், சபையால் நடாத்தப்பட்ட முதலீட்டு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் போதாமை மற்றும் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆக்கபூர்வமான வரி ஊக்குவிப்புத் திட்டம் காணப்படாமை என்பன காரணமாக ஐ.அ.டொலர் 801 மில்லியன் அல்லது இலக்கின் 16 சதவீதத்தை மாத்திரம் சபையால் அடைய முடிந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது எழுத்துமூல உடன்படிக்கையை ஏற்படுத்தாமல் பெற்றுக்கொண்ட ஒப்பந்த சேவைகளிற்காக ரூபா 24,215,422 தொகையை செலவிட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| பெறப்பட்ட சேவையின் விபரங்கள் | காலப்பகுதி | செலுத்தப்பட்ட தொகை |
| --- | --- | --- |
| | | ரூபா |
| இணையத்தள பராமரிப்பு சேவை | 2015 ஒக்தோபர் 01 தொடக்கம் 2016 ஒக்தோபர் 31 வரை | 2,825,000 |
| சுகாதார சேவைகள் | 2016 சனவரி 01 தொடக்கம் திசெம்பர் 31 வரை | 4,156,200 |
| பதவியணியினருக்கான தேநீர் வழங்கல் | 2016 சனவரி 01 தொடக்கம் திசெம்பர் 31 வரை | 7,338,588 |
| பாதுகாப்பு சேவைகள் | 2016 ஒக்தோபர் 01 தொடக்கம் திசெம்பர் 31 வரை | 9,895,634 |
| **மொத்தம்** | | **24,215,422** |

(ஆ) எழுத்துமூல உடன்படிக்கைகளை ஏற்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது சபையால் ரூபா 28,826,165 கூட்டுத்தொகையான பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியை மேம்படுத்தும் ஒப்பந்தத்தின் உசாத்துணை வேலைகளை வடிவமைப்பதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 2,504,096 கொடுப்பனவு செய்தல்.

(ii) ரூபா 26,322,069 கூட்டுத்தொகையான வருடாந்த வாடகையில் வெளித்தரப்பினர்களிற்கு சபையின் கட்டிடங்கள், வளாகங்கள் மற்றும் களஞ்சியங்களை பின்வருமாறு வாடகைக்கு வழங்குதல்.

| நடவடிக்கை | தரப்பினரின் பெயர் | செலுத்திய தொகை |
| --- | --- | --- |
| | | ரூபா |
| சேர் பரொன் ஜயதிலக மாவத்தையிலுள்ள கட்டிடத்தின் 03, 04 மற்றும் 05 ஆம் இலக்க மாடிகளை வாடகைக்கு வழங்கியமை | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 18,629,884 |
| 04 ஏற்றுமதி செயன்முறை வலயங்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகளின் 12 எண்ணிக்கையான கட்டிடங்கள், வளாகங்கள் மற்றும் களஞ்சியங்கள் | தனியார் தரப்பினர்கள் | 7,692,185 |
| **மொத்தம்** | | **26,322,069** |

(இ) சபையானது அதன் அழிவடைந்த வளவுகள் மற்றும் கட்டிடங்கள் மீதான அவற்றின் குத்தகை உரிமைகள் மற்றும் அக்கறைகள் மற்றும் ஏதாவது வங்கி மற்றும் / அல்லது கடன் நிறுவனங்களிற்கான அழிவடைந்த வளவிற்கு நிரந்தரமாக நிறுவப்பட்ட சகல பொறிகள், இயந்திரங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பவற்றை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்ட உடன்படிக்கைகளை கைசாத்திடுவதன் மூலம் ஈடுவைப்பதற்கு முதலீட்டு கம்பனிகளுக்கு அனுமதியை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களை தீர்ப்பனவு செய்யத் தவறியதால் சில கம்பனிகள் கலைக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டன.

(ii) சபையானது காணிப் பெறுமதி, விளைவற்ற காணியின் சந்தர்ப்பக் கிரயம் மற்றும் ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களுடன் தொடர்புபட்ட தீர்க்கப்படாத பிரச்சனைகளினால் சபைக்கு கிடைக்க வேண்டியவை என்பவற்றை இழந்து நட்டத்தை தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

(ஈ) மபுதுகல, ஹொரணவிலுள்ள பேர்த் தோட்டம் வரையறுக்கப்பட்ட வித்யோதயா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி (தனியார்) கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ரூபா 5 மில்லியன் கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வங்கிக்கு மேற்குறிப்பிடப்பட்ட ஆதனம் ஈடு வைக்கப்பட்டிருந்தது. மேலும், குறிப்பிடப்பட்ட கடனை பெறுவதற்காக முத்தரப்பினர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. கடனை செலுத்தத் தவறியதன் காரணமாக 2013 மே 12 இல் வங்கியால் ஆதனம் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் பொது ஏலமிடுதலில் ஆதனத்தை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் புதிய முதலீட்டாளரொருவர் வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனத்தை கொள்வனவு செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் 2017 ஏப்ரல் 15 வரையிலும் சபைக்கும் புதிய முதலீட்டாளரிற்கும் இடையே எடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(உ) 1999 ஆம் ஆண்டின் போது சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பேர்த் தோட்டத்தின் ஒரு பகுதி 1999 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகள் காலப்பகுதிக்கு முகாமை செய்வதற்காக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்எல்எஸ்பிசீ) கையளிக்கப்பட்டிருந்தது. பின்னர் இது 2006 திசெம்பர் 08 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பேர்த் தோட்டம் தொடர்பாக எஸ்எல்எஸ்பிசீ இடமிருந்து பெறவேண்டிய மொத்தத்தொகை ரூபா 16.47 மில்லியன் தொகையாக இருந்தது. எவ்வாறாயினும், சபையானது எஸ்எல்எஸ்பிசீ இடமிருந்து பெறவேண்டிய சரியான தொகையை 2016 திசெம்பர் 31 வரையிலும் இனங்கண்டு அறிக்கையிட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 12.42 மில்லியன் கூட்டுத்தொகையான மோட்டார் வாகனங்கள் மற்றும் சுற்றுலா விடுதிக்கான வாடகை நடைமுறைக் கணக்குகளினூடாக ஒப்பந்ததாரரின் கணக்கிற்கு முறையற்று மாற்றப்பட்டிருந்தது.

(iii) மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், சபையால் கொள்வனவு செய்யப்பட்ட காணியின் பரப்பளவு 1563 ஏக்கர்கள் மற்றும் 24.74 பேர்ச்கள் ஆக இருந்த போதிலும் சபையால் சொந்தமாக்கப்பட்ட காணியின் பரப்பளவு 1435 ஏக்கர்கள், 3 றூட்கள் மற்றும் 25.03 பேர்ச்கள் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சபையானது 2016 திசெம்பர் 31 வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2012 மார்ச் 22 ஆம் திகதிய 12/356/504/045 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கனரக கைத்தொழில் வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு சம்பூர், திருகோணமலையிலுள்ள 818 ஏக்கர்கள் பரப்பளவுடைய காணியை சபைக்கு மாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. காணியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் தலைவரால் கட்டணமின்றி சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்திற்காக சபைக்கு வழங்கப்பட்ட காணி 2015 மே 07 ஆம் திகதிய 1913/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ii) காணி சுவீகரிப்பின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை இடம்மாற்றுவதற்காக 1218 வீடுகளை நிர்மாணிப்பதற்காக மூதூர் பிரதேச செயலாளரிற்கு ரூபா 347,130,000 தொகை வரை நிதிகளை விடுவிப்பதற்கான அங்கீகாரத்தை சபை வழங்கியிருந்தது. அதற்கிணங்க, 2014 ஆகஸ்ட் 01 இல் பகுதிக் கொடுப்பனவாக மூதூர் பிரதேச செயலாளரிற்கு ரூபா 20,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 ஒக்தோபர் 29 ஆம் திகதிய மூதூர் பிரதேச செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், 50 வீடுகளின் அத்திவார வேலைகள் பூர்த்தியடைந்திருந்ததுடன் நிர்மாண வேலைகளிற்காக ரூபா 3,584,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. சபையானது 2016 திசெம்பர் 31 வரையிலும் மூதூர் பிரதேச செயலாளரிடமிருந்து ரூபா 16,416,000 மீதியை அறவிடுவதற்கோ அல்லது நிர்மாண வேலைகளை தொடர்வதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள அபயபுரவில் ஐம்பது ஆடைத் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்றுமதிக்காக ஆடை மற்றும் புடவை உற்பத்திப் பொருட்களின் உற்பத்திக்கான வணிகத்தை செயற்படுத்துவதற்கு 1998 யூலை 16 இல் சபையுடன் தனியார் கம்பனியொன்று உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 மே 31 வரையிலும் ஒதுக்கப்பட்ட காணிக்கான காணித் தவணைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கம்பனியால் குடியிருக்கப்பட்ட காணி அரசாங்கத்தால் சபைக்கு மானியமாக வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க காணிக்கான விசேட மானியத்தின் பிரகாரம், காணியிலிருந்தான வருமானம் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் சபையானது இதனுடன் இணங்கியிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

### 4.3.1 ஏற்றுமதி செயன்முறை வலயங்கள் (ஈபிஇசற்), கைத்தொழில் பேட்டைகள் (ஐபி) மற்றும் பிராந்திய அலுவலகங்களின் செயற்பாடு

பின்வரும் ஏற்றுமதி செயன்முறை வலயங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் மிகையான நிர்வாகச் செலவினங்கள் காரணமாக பல ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ச்சியாக நட்டங்கள் நிலைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

| கூறு | ஆண்டிற்கான வரிக்கு முன்னரான மிகை/ (பற்றாக்குறை) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| கொக்கல ஏற்றுமதி செயன்முறை வலயம் | (10,903) | (47,108) | (40,781) | (14,050) | (11,775) | (26,980) |
| வதுபிட்டிவள ஏற்றுமதி செயன்முறை வலயம் | (9,062) | (3,323) | 777 | (2,969) | (7,767) | (15,743) |
| வட மேற்கு பிராந்திய அலுவலகம் | (31,508) | (30,307) | (28,010) | (9,147) | (21,639) | (22,256) |

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலீட்டு ஊக்குவிப்பு வகைப்படுத்தலின் கீழ் மீளாய்வாண்டில் ஏற்பட்ட ரூபா 901,000 செலவினங்கள் சபையின் நோக்கத்துடன் தொடர்புபட்டிருக்கவில்லை.

(ஆ) வகவத்தை, ஹொரணவில் உள்ள கைத்தொழில் பேட்டைக்குச் சொந்தமான 100 ஏக்கர் பரப்பளவான காணியொன்று உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளிற்கான ஆர ரயர்களை உற்பத்திசெய்வதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. காணியின் உண்மையான சந்தைப் பெறுமதியை கருத்திற்கொள்ளாமல் அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட்ட பெயரளவுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு ஏக்கரொன்று ரூபா 100 படி வருடாந்த குத்தகை வாடகைக்காக 99 ஆண்டுக் குத்தகை அடிப்படையில் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு சபையானது கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 97,937,000 கிரயத்தில் 2004 சனவரி 23 இல் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட 122 ஏக்கர்கள், 01 றூட் மற்றும் 27.4 பேர்ச்கள் பரப்பளவுள்ள மலிடுவகந்த தோட்டம் என்ற பெயருடைய காணி 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இந்தக் காணியின் புத்தகப் பெறுமதி ரூபா 100,800,000 ஆகும்.

(ஆ) ரூபா 1,958,839 தொகையான சுனாமி மீட்சி நிதியத்தின் மீதி மற்றும் ரூபா 1,917,160 தொகையான பொதுநலவாய எவ்டிஐ மேம்பாட்டிற்காக பெறப்பட்ட நிதிகள் என்பன குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாறாதிருந்தன.

## 4.6 இணங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆடைகள் மற்றும் ஏனைய புடவைகளின் உற்பத்தி வணிகமொன்றை உருவாக்கி செயற்படுத்துவதற்கும் ஏற்றமதி செய்வதற்கும் இலங்கை முதலீட்டு சபை சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் 1992 ஆகஸ்ட் 14 இல் சபையுடன் தனியார் கம்பனியொன்று உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டிருந்தது. 1992 நவம்பர் 05 இல் சபை உடன்படிக்கையை இடைநிறுத்தியிருந்ததுடன் உடன்பட்ட இழப்பீட்டுடன் சபைக்கு அவற்றின் சகல கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களை மாற்றுவதற்கு முதலிட்ட கம்பனியை வேண்டியிருந்தது. சபையானது இணங்கியவாறு இழப்பீட்டைச் செலுத்துவதற்கு தவறியிருந்தமையால் விடயமானது இலங்கை தேசிய பிணக்குத்தீர்த்தல் நிலையத்திற்கு விசாரணைக்கு விடப்பட்டிருந்ததுடன் முழுவதுமாக மற்றும் இறுதி தீர்ப்பனவாக ரூபா 23,835,535 ஆன தொகையை செலுத்துவதற்கு 2000 ஆகஸ்ட் 07 இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட தொகையின் கொடுப்பனவு மீது சபையிடமிருந்து ரூபா 37,200,000 தொகையான மேலுமொரு கொடுப்பவை வேண்டி நடுவர் தீர்ப்பை வலியுறுத்தி நடுவர் தீர்ப்பு அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் எச்சீ/ஏஆர்பீ/1254/02 ஐ கொண்ட வழக்கொன்றை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் கம்பனி தாக்கல்செய்திருந்தது. 2012 மே 14 இல் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம், சபையானது ரூபா 102,138,350 ஆன மேலதிக தொகையை செலுத்த வேண்டியிருந்தது. சபையானது உயர் நீதிமன்ற தீர்மானத்துடன் இணங்க தவறியிருந்தமையால் ரூபா 102,138,350 ஆன தொகைக்காக 1431688 ஆம் இலக்கத்தைக் கொண்ட வங்கி கணக்கை பறிமுதல் செய்வதற்கு 2014 திசெம்பர் 22 இல் வர்த்தக உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் கட்டளையிட்டிருந்தார். எவ்வாறாயினும், சபையால் 2015 சனவரி 01 இல் ரூபா 102,138,350 தொகை உயர் நீதிமன்ற வங்கிக் கணக்கில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது. 2017 மே 31 வரையிலும் இந்த வழக்கு செயன்முறையிலிருந்தது.

(ஆ) சபையானது பல அக்கறை முரண்பாடுகள் தொடர்பில் சபையின் ஊழியரொருவரை வேலையிலிருந்து இடைநிறுத்தியிருந்ததுடன் இடைநிறுத்திய தீர்மானத்திற்கெதிராக கொழும்பு தொழில் நீதிமன்றில் வழக்கொன்றை ஊழியர் தொடுத்திருந்தார். தொழில் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம், 2016 ஆகஸ்ட் 22 இல் கொழும்பு தொழில் நீதிமன்றில் இழப்பீடாக ரூபா 3,627,900 தொகையை சபை வைப்பிலிட வேண்டியிருந்தது. அதன் பின்னர் கொழும்பு தொழில் நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கெதிராக சபையானது மேன்மறையீடு செய்திருந்ததுடன் 2017 மே 31 வரையிலும் வழக்கு செயன்முறையிலிருந்தது.

## 4.7 தாமதமான செயற்திட்டங்கள்

2009 ஆம் ஆண்டில் வதுபிட்டிவள ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திலுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியின் முன்னேற்றங்களிற்கான முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நாளொன்றிற்கு 400 கன மீற்றரிலிருந்து 650 கன மீற்றரிற்கு பொறியின் இயலளவை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2016 மே 14 இல் சுத்திகரிப்புப் பொறியின் பராமரிப்பு சேவைகளை வழங்குகின்ற கம்பனியானது சுத்திகரிப்புப் பொறியின் சீரான செற்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் பொறியின் இயலளவு போதாமை பாரிய தாக்கமளித்திருப்பதால் கழிவுநீர் வெளியேற்றும் அளவை எதிர்கொள்வதற்கான பொறியின் இயலளவை அதிகரித்தல் மிகவும் முக்கியமானதெனவும் பொறி வெளியீட்டின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தர நியமங்களை எதிர்கொள்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் சபைக்கு அறிவித்திருந்தது. 2016 ஆகஸ்ட் 03 இல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 மே 31 வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 4.8 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட / வழங்கப்பட்ட வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்கள்

நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் தொடர்பான 2003 யூன் 02 இன் பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 9.4 ஆம் பிரிவுகளுக்கு முரணாக சபையின் மூன்று ஊழியர்கள் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,465,346 தொகை சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரப் படிகளாக ஏற்பட்டிருந்தன.

(ஆ) மோட்டார் வாகனங்கள் தரிப்பிட அனுமதிச்சீட்டுக்கள்

உலக வர்த்தக மையத்திலுள்ள பன்னிரெண்டு மோட்டார் வாகன தரிப்பிட அனுமதிச்சீட்டுகள் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா 720,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையானது 2017 மே இறுதிவரையிலும் அமைச்சிடமிருந்து இந்தச் செலவினத்தை மீள்நிரப்புவதற்கு தவறியிருந்தது.

(இ) ரூபா 3,823,250 கிரயமான சபையின் நிலையான சொத்துக்கள் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

## 4.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொன்னூற்றி ஐந்து (95) முகாமைத்துவ மட்ட பதவிகள் உள்ளடங்கலாக வெவ்வேறு பதவியணி வகைகளில் நூற்றி மூன்று (103) வெற்றிடங்கள் 2016 திசெம்பர் 31 வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையானது அதனுடைய உண்மையான மனித வளத் தேவைப்பாடுகளை கருத்திற்கொள்ளாமல் ஊழியர்களை ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்திருந்தமையால் அறுபத்து மூன்று (63) முகாமைத்துவ உதவியாளார்கள் (தொழில்நுட்பமற்ற) மற்றும் நூற்றி எண்பத்தெட்டு (188) ஆரம்ப மட்ட ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக காணப்பட்டனர்.

(இ) முகாமைத்துவ உதவியாளர்கள், ஆரம்ப மட்டம் திறனுள்ள மற்றும் திறனற்ற வகுதியின் கீழான 251 பதவிகள் பதவியணியினரில் மேலதிகமாக காணப்பட்ட போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 58,504,285 மேலதிகப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) எண்பத்தியிரண்டு (82) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள், பதின்மூன்று (13) அமைய அடிப்படையிலான ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பரிற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த நாற்பத்தியாறு (46) அமைய ஊழியர்கள் 2006 ஏப்ரல் 10 இன் 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக நிரந்தரப் பதவியணிக்கு 2016 ஆம் ஆண்டின் போது உள்ளீர்க்கப்பட்டிருந்தனர்.

(உ) எதிர்கால மனித வளத் தேவைப்பாடுகளிற்காக தொடர்திட்டம் சபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் சில பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் இல்லாமல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.10 சபையால் மற்றும் சபைக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட வழக்குகள்

சபையின் சட்டப் பிரிவில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் 41 தீர்க்கப்படாத நீதிமன்ற வழக்குகள் காணப்பட்டதுடன் அதில் 35 வழக்குகள் ரூபா 15,704,291,016 இழப்பீடு கோரி சபைக்கெதிராக வெளித்தரப்பினாகளால் தொடரப்பட்டிருந்ததுடன் சபையானது ரூபா 6,164,875 இழப்பீடு கோரி வெளித்தரப்பினரிற்கெதிராக 06 சட்ட வழக்குகளை தொடுத்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது சபையின் கூட்டிணைந்த திட்டத்துடன் இணங்கியிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஆளணி வேதனங்கள் மீதான கட்டுப்பாடு | தொழில்சார் படிகள், மாதாந்த போக்குவரத்துப் படிகள் மற்றும் முக்கிய செயலாற்றல் கொடுப்பனவுகள் போன்ற பதவியணியினர் படிகளிற்காக முறையான அங்கீகாரங்களை சபை பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) தொழில்முயற்சிகளிடமிருந்து பெறவேண்டிய சேகரிப்புக்கள் | பீஓஐ அங்கீகரித்த தொழில்முயற்சிகளிடமிருந்து நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுவதற்கு சபையால் முறையான மற்றும் ஆக்கபூர்வமான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |